**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 2/2026**

2026ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய சுமதி **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 06.04.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : சுமதி | | |
| Father /Husband Name | : ராமச்சந்திரன் | Court | : |
| Village | : மாப்படுகை | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 57/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 10.12.2016 | அமனுல்லா பெயரில் உள்ள பட்டாவின் கணினி நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 23.05.1993 | வாதியின் கணவர் தாவா சொத்து சம்பந்தமாக செய்து கொண்ட கிரய ஒப்பந்தத்தின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 14.02.1996 | வாதியின் கணவரின் இறப்பு சான்றிதழின் நகல் அசலுடன் ஒப்பிடப்பட்டு **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4. | 15.11.2025 | வாதி பெயரில் உள்ள பிரதம மந்திரி பயிர் காப்பீடு செய்ததற்கான ரசீதின் கணினி நகல் **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.